# தமிழ் முரசு

TAMIL MURASU

VOICE OF THE COMMUNITY



சாதனா 2024

தமிழ் மாணவர்கள் உற்சாகம் 3



ஆவணங்கள் சிக்கின

27 இடங்களில் என்ஐஏ சோதனை 4



இருக்கை மறுப்பு

ரூ.48,000 இழப்பீடு தர உத்தரவு 5



விக்ரமுடன் மோதல்

எஸ்.ஜே.சூர்யா அதிரடி முடிவு 8





SPH Media Limited MCI (P) 068/10/2023 http://www.tamilmurasu.com.sg தோற்றம்: 1935 நிறுவனர்: தமிழவேள் கோ.சாரங்கபாணி 12 பிப்ரவரி 2024 • திங்கள் • 60 காசு


## ‘கூடுதலாக 5,600 தாதியர் பணியமர்த்தப்பட்டனர்’

சிங்கப்பூரில் தாதியரின் எண்ணிக்கையை உயர்த்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலனளித்துள்ளன.

கடந்த ஆண்டு கூடுதலாக 5,600 தாதியர் பணியமர்த்தப்பட்டனர்.

அவர்களில் 4,500 பேர் பணியைத் தொடங்கிவிட்டனர்.

சீனப் புத்தாண்டை முன்னிட்டு பிப்ரவரி 10ஆம் தேதியன்று டான் டோக் செங் மருத்துவமனையில் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் சுகாதார அமைச்சர் ஓங் யி காங் கலந்துகொண்டு பேசினார்.

நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையைவிட கூடுதல் தாதியர் பணியமர்த்தப்பட்டுள்ளதாக அப்போது அவர் தெரிவித்தார்.

“சுகாதாரப் பராமரிப்புத் துறையில் ஊழியர் பற்றாக்குறை எப்போதுமே இருந்து வருகிறது. எனவே, தனியார் மற்றும் பொது மருத்துவமனைகளில் மேலும் 4,000 தாதியரைப் பணியமர்த்த இலக்கு கொண்டிருந்தோம்.

கொவிட்-19 நெருக்கடி நிலையின்போது சில தாதியர் வேலைகளை கைவிட்டனர்.

அதை ஈடுசெய்ய கூடுதல் தாதியரை வேலைக்கு எடுக்கத் திட்டமிட்டோம். அதே சமயம், ஊழியரணியை விரிவுபடுத்தவும் விரும்பினோம்,” என்று அமைச்சர் ஓங் கூறினார்.



டான் டோக் செங் மருத்துவமனையில் பிப்ரவரி 10ஆம் தேதியன்று சீனப் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் சுகாதார அமைச்சர் ஓங் யி காங் (நடுவில்) கலந்துகொண்டார். சீனப் புத்தாண்டின் 15வது நாள் கொண்டாட்டங்களுக்கு முன்பு தாதியருக்கான நீண்டகால சலுகைத் திட்டம் தொடர்பான விவரங்கள் அறிவிக்கப்படும் என்று அமைச்சர் ஓங் கூறினார். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

கடந்த ஆண்டு சிங்கப்பூரில் பணிபுரிந்த தாதியரின் எண்ணிக்கை 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகம் என்று சுகாதார அமைச்சு தெரிவித்தது.

கடந்த ஆண்டு 3,400 புதிய தாதியர் பணியமர்த்தப்பட்டனர்.

2022ஆம் ஆண்டில் 43,772 தாதியரும் பதிவு செய்யப்பட்ட மகப்பேறு தாதியரும் பணியில் இருந்தனர்.

அவர்களில் 36,995 பதிவு செய்யப்பட்ட தாதியரும் அடங்குவர்.

சிங்கப்பூரின் மூப்படையும் மக்கள்தொகைக்கு ஆதரவு அளிக்க 2030ஆம் ஆண்டுக்குள் மருத்துவமனைகள், மருந்தகங்கள், மூத்தோர் பராமரிப்பு நிலையங்கள் ஆகியவற்றில் 82,000 தாதியர், சுகாதார நிபுணர்கள், பராமரிப்பு ஊழியர்கள் ஆகியோர் தேவைப்படுவர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்திருந்தது.

கடந்த ஆண்டு கூடுதல் வெளிநாட்டுத் தாதியருக்கு சிங்கப்பூர் நிரந்தரவாசம் வழங்கப்பட்டதாக அமைச்சர் ஓங் தெரிவித்தார்.

சிங்கப்பூரில் பணியாற்றும் வெளிநாட்டுத் தாதியரில் பெரும்பாலானோர் பிலிப்பீன்ஸ், மலேசியா, மியன்மார் போன்ற வட்டார நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

சீனப் புத்தாண்டின் 15வது நாள் கொண்டாட்டங்களுக்கு முன்பு தாதியருக்கான நீண்டகால சலுகைத் திட்டம் தொடர்பான விவரங்கள் அறிவிக்கப்படும் என்று அமைச்சர் ஓங் கூறினார்.

## சூறைக் காற்றுபோல் சுழன்றடித்த கொசுக்கள்



புனேயின் கராடி பகுதியில் சுழல் காற்று போல பறந்த கொசுக்கள்.
**படம்: எக்ஸ் தளக் காணொளி**

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள புனே நகர மக்கள் அண்மையில் வித்தியாசமான காட்சி ஒன்றைக் காண நேரிட்டது.

அங்குள்ள முத்தா நதியின் மேற்புறமாக சுழல்காற்றைப் போல் கொசுக்கள் சுற்றிச்செல்வதை அவர்கள் கண்டனர்.

இந்திய விமானப் படையின் மூத்த அதிகாரி ஒருவர் அதைக் காணொளியாக எடுத்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இணையத்தில் பலரது ஆர்வத்தையும் தூண்டிய அந்தக் காணொளி குறித்து சமூக ஊடகத்தில் சிலர் சினம் தெரிவித்துள்ளனர்.

புனே நகரின் கேசவ் நகர், கராடி பகுதிகளில் ‘கொசு’ சுழல் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

காணொளியில், அந்த நதிக்கரையில் கொசுக்கூட்டம் சுற்றிச் சுழன்று செல்வதைக் காண முடிகிறது.

பொதுவாக பூச்சிகள் இனப்பெருக்க காலத்தில் இவ்வாறு கூட்டமாகப் பறப்பது இயல்பு என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இருப்பினும், நகர்ப்புறங்களில் இத்தகைய காட்சி அரிது என்கின்றனர் கவனிப்பாளர்கள்.

காணொளி இணையத்தில் பரவியதை அடுத்து குடியிருப்பாளர்கள் பலரும் கொசுத் தொல்லை குறித்தும் அதன் பாதிப்புகள் குறித்தும் கவலை தெரிவித்ததால் அந்த வட்டாரத்தில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன.

## ஜோகூர் அமைச்சரவையில் மாற்றம்: முதல்வர் அறிவிப்பு

ஜோகூர் மாநில முதல்வர் ஓன் ஹஃபிஸ் காஸி நிர்வாகப் பொறுப்பு ஏற்று ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஜோகூர் மாநில அமைச்சரவை மாற்றியமைக்கப்படவிருக்கிறது.

இது குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு அடுத்த வாரத்திற்குள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாக முதல்வர் ஓன் ஹஃபிஸ் காஸி தெரிவித்தார்.

“அமைச்சரவையில் இலாகாக்கள் மாற்றப்படுகின்றன. குறைந்த அளவிலேயே மாற்றம் இருக்கும். ஜோகூர் மாநில அரசாங்கத்தை வலுப்படுத்துவதற்காக இந்த மாற்றம் இடம்பெறுகிறது,” என்று ஜோகூர் முதல்வர் கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை ஜோகூர் அம்னோ அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்திற்குப் பிறகு திரு ஓன் ஹஃபிஸ் காஸி இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

சென்ற புதன்கிழமை (7 பிப்ரவரி) சுற்றுலாத் துறையை தாம் எடுத்துக் கொள்ளப் போவதாக அவர் கூறியிருந்தார்.

இது, அமைச்சரவை மாற்றம் இடம்பெறுவதற்கான அறிகுறியை வெளிப்படுத்தியிருந்தது.



சுற்றுலாத் துறையை தான் கவனிக்கப் போவதாக ஜோகூர் முதல்வர் ஓன் ஹஃபிஸ் காஸி கூறியுள்ளார்.
**படம்: ஓன் ஹஃபிஸ் காஸி ஃபேஸ்புக்**

அன்றைய தினம், தமது வீட்டில் நடைபெற்ற சீனப் புத்தாண்டு ஒன்றுகூடலின்போது சீனத் தலைவர்களிடம் பேசிய அவர், சுற்றுலாத் துறைக்கு தாம் பொறுப்பு ஏற்க உள்ளதாக தெரிவித்திருந்தார்.

“எங்களுடைய பொறுப்புகளில் சிறிய மாற்றங்களை செய்திருக்கிறோம். அதன் பிறகு சுற்றுலாத் துறையை நான் கவனித்துக் கொள்வேன்,” என்று முதல்வர் ஓன் ஹஃபிஸ் காஸி கூறியிருந்தார்.


தமிழ் முரசு சந்தாவுக்கு அழைக்கவும்: 6388-3838

An SPH Media Limited publication


## மியன்மார்: இளம் ஆண்களும் பெண்களும் கட்டாய ராணுவ சேவை செய்ய உத்தரவு

மியன்மாரின் ராணுவ ஆட்சியாளர்கள், நாட்டில் உள்ள இளம் ஆண்களும் பெண் களும் கட்டாய ராணுவ சேவையில் ஈடுபட உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

அந்நாட்டு அரசாங்க ஊடகம் சனிக்கிழமை (பிப்ரவரி 10) அந்தத் தகவலை வெளியிட்டது.

மியன்மாரின் பல்வேறு பகுதிகளில் தன்னாட்சி கோரி ஆயுதமேந்திய கிளர்ச்சியாளர்கள் நடத்தும் போராட்டங்களைக் கட்டுப்படுத்தத் திணறும் ராணுவ அரசாங்கம் இத்தகைய உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவின்கீழ், 18 முதல் 35 வயதுக்கு இடைப்பட்ட ஆண்களும் 18 முதல் 27 வயதுக்கு இடைப்பட்ட பெண்களும் ஈராண்டுகள் வரை கட்டாய ராணுவ சேவை செய்ய வேண்டும்.

45 வயது வரையிலான மருத்துவர்கள் போன்ற சிறப்புத் திறனாளர்கள், மூன்று ஆண்டுகள் கட்டாய ராணுவ சேவையில் ஈடுபட வேண்டும்.

தற்போதைய நெருக்கடி நிலையில், இந்தக் காலகட்டம் மொத்தம் ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம் என்று அரசாங்க ஊடகம் தெரிவித்தது.

மியன்மாரில் 2021ஆம் ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் ராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியது. அது முதல் அங்கு போராட்டமும் குழப்பமும் நிலவிவருகின்றன.

கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து ஆயுதமேந்திய போராளிகள் குழு மற்றும் ஜனநாயக ஆதரவுக் கூட்டணி உடனான மோதல்களில் ராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டனர்.

ராணுவ வீரர்கள் ஆட்சேர்ப்பில் சிரமத்தை எதிர்கொள்ளும் மியன்மார் ராணுவம், போர்ப் பயிற்சி பெறாத ஊழியர்களையும் களத்தில் இறங்கிப் போரிட வலியுறுத்துவதாகக் கூறப்படுகிறது.

“நாட்டின் பாதுகாப்பை உறுதிசெய்யும் கடமை ராணுவ வீரர்களுக்கு மட்டுமானதன்று. குடிமக்கள் அனைவருக்கும் அந்தக் கடமை உள்ளது. எனவே, அனைவரும் கட்டாய ராணுவ சேவை தொடர்பான சட்டத்தைப் பெருமையுடன் மதித்து நடக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,” என்று மியன்மார் ராணுவ ஆட்சியாளர்களின் பேச்சாளர் ஸாவ் மின் டுன், அரசாங்க ஊடகத்திடம் தெரிவித்தார்.

மியன்மாரில் கட்டாய ராணுவ சேவை தொடர்பான சட்டம் 2010ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.



மியன்மாரில் 18 முதல் 35 வயதுக்கு இடைப்பட்ட ஆண்களும் 18 முதல் 27 வயதுக்கு இடைப்பட்ட பெண்களும் ஈராண்டுகள் வரை கட்டாய ராணுவ சேவை செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.
**படம்: ஏஎஃப்பி**

ஆனால் இப்போதுதான் அது நடப்புக்கு வந்துள்ளது.

கட்டாய ராணுவ சேவைச் சட்டத்தை மீறுவோர்க்கு ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என்று ராணுவ அரசாங்கத்தை மேற்கோள்காட்டி ராய்ட்டர்ஸ் தெரிவித்தது.